# மரணத்தைக் கண்டு பயமா?

சிறு வயதிலிருந்தே எனக்கு மரணத்தைப் பற்றி ஒரு பயம் இருந்தது. அது எப்படி ஏற்பட்டது எனக்குத் தெரியவில்லை. ஆனால், அந்தப்பயம், நான் வளர்ந்து வாலிபனான பிறகும்கூட என்னைவிட்டு அகல மறுத்தது. சொல்லப்போனால், ஒருவிதத்தில், என்னைக் கடவுளிடத்தில் கொண்டு வந்ததே மரணத்தைப்பற்றி எனக்கிருந்த அந்தப் பயம்தான்.

மரணத்தைப்பற்றிய பயம் யாருக்குத்தான் இல்லை. உங்களுக்கில்லையா? நாமெல்லோருமே யாருக்கும் தெரியாமல் உள்ளுக்குள்ளே மரண பயத்தோடுதான் வாழ்ந்து வருகிறோம். ஏனென்றால், நாம் எங்கிருந்து வந்தோம்? இறந்த பிறகு எங்கு போகப்போகிறோம்? என்பதெல்லாம் நமக்குத் தெரியவில்லை. நாம் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்களுக்கெல்லாம் பிரதிபலனாக தகுந்த தண்டனை நமக்குக் காத்திருப்பதாக பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல், பிறவி என்ற ஆழ்கடலில் நாம் முடிவில்லாத, எண்ணற்ற பிறப்புகளை, என்னென்னவோவாக எல்லாம் பிறந்து அனுபவிக்க வேண்டும் என்று என் பெற்றோர் சொல்லவும் கேட்டிருக்கிறேன். கடவுள் ஏன் இப்படி நம்மை ஆட்டிப்படைக்கிறார் என்ற கேள்வியும் என் உள்ளத்தில் எழுந்ததுண்டு. இப்படி நான் மரணத்தைக்கண்டு ஏன் அஞ்ச வேண்டும்? என்று எனக்குள்ளேயே பொருமிக் கொண்டிருந்த நாட்கள்தான் எத்தனை.

இந்த மரண பயம்தான் கடவுள் யார் என்று அறிந்து கொள்ள என்னைத் தூண்டியது. அதற்காக நான் செய்த முயற்சிகள்தான் எத்தனை! அவர் எந்த மதத்தைச் சேர்ந்தவர்? எங்கிருக்கிறார்? என்று அறிந்து கொள்ள பயனளிக்காத பல முயற்சிகளையும் செய்து பார்த்திருக்கிறேன். இறுதியில் தோல்வி எனக்குத்தான். மரண பயமோ அகல மறுத்தது. யார் கடவுள் என்றும் அறிந்து கொள்ள முடியவில்லை. நாமோ ஒரு நாள் இறக்கத்தான் போகிறோம்; அதிலிருந்து விடுபடுவதென்பதும் இயலாத காரியம், என்று எண்ணிய போதெல்லாம் நெஞ்சுக்குள்ளேயே சொல்ல முடியாத ஒரு வேதனையும் ஏற்பட்டது.

ஒரு போதுமே இதிலிருந்து விடுதலை கிடைக்கும் என்று நான் கனவிலும் எண்ணியதில்லை; யாரும் சொல்லியிருந்தாலும் நம்பியிருக்க மாட்டேன். வேதபோதகரான ஒரு மனிதர் இந்த மரணம் ஏற்படுவதன் காரணத்தை ஒருமுறை விளக்கிச் சொன்னதைக் கேட்டேன். முதலில் அதை என் மனம் ஏற்றுக் கொள்ள மறுத்தது. ஆனால், சிந்தித்துப்பார்த்தபோது அவர் சொல்வது எத்தனை உண்மை என்று உணர்ந்தேன். அவர் அப்படி என்னதான் சொன்னார் என்று கேட்கிறீர்களா?

“பாவத்தினாலேயே உலகில் மரணம் சம்பவித்தது” என்று அந்தப் போதகர் வேதத்தில் இருந்து எடுத்து விளக்கினார். அது புதிய ஏற்பாடு என்ற நூலில் எழுதப்பட்டுள்ள ஒரு வசனம் என்பதை அறிந்தேன்.

**“பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்.” (ரோமர் 6:23)**

அப்போதகர், வேறும் பல உண்மைகளை வேதத்தில் இருந்து எடுத்துக் கூறினார். மரணம் என்பது நம் உடலுக்கு ஏற்படும் அழிவை மட்டுமல்லாது, நமது ஆன்மீக இறப்பையும் குறிப்பதாக அவர் கூறினார். அதாவது, நாம் பாவத்தினால் கடவுளை அறியாமல் இவ்வுலகில் வாழ்வதே மோசமான மரணம் என்று எடுத்துக் காட்டினார். அதன் பலனாக நாம் இறந்த பிறகு கடவுளிடம் போய்ச்சேராமல் நரகத்திற்கே போகப்போகிறோம் என்று கடவுளே வேதத்தில் வெளிப்படுத்தியிருப்பதாகவும் அவர் கூறினார். மரண பயம் மட்டுமே இருந்த என்னுள்ளத்தில் இப்போது ஒரு புதிய பயமும் எழுந்தது. இதுவரைக் கடவுளைக்குறித்து நான் இவ்வளவு தூரம் ஏன் எண்ணிப் பார்க்கவில்லை என்று கலங்கினேன். அவருக்கு எதிராக நடந்ததால்தானே மரணம் ஏற்பட்டது என்றும் வருந்தினேன்.

இதிலிருந்து நான் எப்படி விடுபடுவது என்று சிந்தித்துக் கொண்டிருக்கும்போது, அப்போதகர், அதற்குக் கடவுளே ஒரு வழியை ஏற்படுத்தித் தந்திருப்பதாகவும், அவ்வழியைப் பின்பற்றுபவர்கள் அவரை அறிந்துகொண்டு, நரகத்திற்குப் போகாமல் அவரிடமே போய்ச் சேரலாம் என்றும் கூறினார். அவர் கூறிய இன்னுமொரு காரியமும் என்னைச் சிந்திக்க வைத்தது. அவரை அறிந்து கொண்டவர்கள் பாவத்தில் இருந்து விடுதலை பெற்று அவரது அன்பையும், சமாதானத்தையும் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அப்போதகர் கூறினார். அத்தோடு, அழியா ஆன்மீக வாழ்வையும் கடவுள் இவ்வுலகில் மனிதனுக்கு அளிக்கிறார் என்றும் அவர் கூறினார். இப்போது எனக்கு எல்லாமே சிறிது, சிறிதாக புலப்படத் தொடங்கியது. என் மரண பயத்திற்கான காரணத்தை இம்மனிதர் பிட்டுப்பிட்டு வைத்தது கடவுளின் செயலாகவே இருக்க வேண்டும் என்று நம்பினேன். இதைத்தான் அவருடைய அருள் என்று கூறுகின்றார்களோ? இதையெல்லாம் அறிந்து கொள்ளாமல் இவ்வளவு காலமும் என் வாழ்க்கையை வீணடித்துவிட்டேனே என்று என் மனம் வருந்தியது. அவர் நம்மை ஆட்டிப் படைக்கிற கடவுளல்ல, இவ்வுலகில் நாம் படுகிறபாடெல்லாம், நாம் செய்த பாவத்தினால்தான் என்று முதல் முறையாக உணர்ந்தேன்.

கருணையின் தேவனாகிய அந்தக் கடவுளின் செயலால் நான் வேதத்தின் புதிய ஏற்பாட்டை வாங்கி வாசிக்கத் தொடங்கினேன். அது கடவுளின் குமாரனும், பாவத்திலிருந்து எம்மை விடுவிக்க வந்தவருமான இயேசு கிறிஸ்துவைப்பற்றி எனக்கு விளக்கிக் கூறியது. பாவத்திலிருந்து மனந்திரும்பி என்னை விசுவாசி என்று, அன்போடு இயேசு தன் வார்த்தையின் மூலம் என்னோடு பேசினார்; என் இருதயத்தையும் தன் கிருபையால் மாற்றினார். அன்று முதல் என்னைத் துன்புறுத்திக் கொண்டிருந்த மரண பயம் விட்டொழிந்தது. ஒரு புதிய சமாதானத்தையும், கடவுளின் அளவற்ற அன்பையும் இயேசுவின் மூலம் நான் அனுபவபூர்வமாக அறிந்து கொண்டேன்.

நண்பா! மரண பயத்தால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறாயா? இறந்தபின் எங்கே போகப்போகிறோம் என்று தெரியாமல் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறாயா? கடவுளாகிய இயேசுவின் சமாதானத்தையும், அன்பையும் பெற்று இப்பயங்களிலிருந்து இன்றே உன்னை விடுவித்துக் கொள்.

**“ஒருவனுடைய (ஆதாம்) மீறுதலினாலே, அந்த ஒருவன் மூலமாய், மரணம் ஆண்டு கொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசு கிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே.” (ரோமர் 5:17)**

இயேசு கிறிஸ்து மட்டுமே தரக்கூடிய வாழ்க்கையைப் பற்றி மேலும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டுமானால் தயங்காமல் எழுதுங்கள்.

bala@ihug.co.nz

